

பாடம் 12

செப்டம்பர் 14-20

# இரக்கத்தைச் சிநேகித்தல்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *மத் 6:25-33; யாக் 1:5-8; 2:15,16; ஏசா 52:7; 1யோவான் 3:16-18; ஏசா 58:1-10.*

**மனன வசனம்:** செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்; அவன் இரக்கமும் மனஉருக்கமும் நீதியுமுள்ளவன். இரங்கிக் கடன்கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான். சங்கீதம் 112:4,5.

எளியோர்மேல் தேவன் அக்கறைகாட்டுகிறார்; அவர்களுக்கு ஊழியம்செய்யும்படி தம் மக்களை அழைக்கிறார். வேதாகமம் பல இடங்களில் இதுபற்றிச் சொல்கிறது. ஆனாலும் இந்த வேதாகமக் கட்டளையானது ஆங்காங்கே, ஓரளவுக்குத்தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் வருகைக்கும், அதன்பிறகான நிகழ்வுகளுக்கும் பிறகே முற்றிலுமாக நிறைவேறும்.

அதுவரை, தீமை பலவிதங்களில் உருவாகிக்கொண்டிருக்கும்; சாத்தானின் அந்தகாரச் செல்வாக்குகளால் அது மேலும் தீவிரமடையும். தரித்திரம், வன்கொடுமை, சிறுமைப்படுத்தல், அடிமைத்தனம், அடக்குமுறை, சுயநலம், பேராசை போன்றவற்றில் இந்தத் தீமை வெளிப்படுகிறது. எவ்வளவுதான் எதிர்ப்பு இருந்தாலும், சமுதாயங்களும் சபைகளும் குடும்பங்களும் இந்தத் தீமைகளை எதிர்க்கவேண்டும். தேவனுடைய அன்பையும் கற்பனைகளையும் உணர்ந்தவர்களாக, இயேசுவின் தியாகம் மற்றும் ஊழியத்தின் வெளிச்சத்தில் வாழவேண்டும்; பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தால் பெலப்பட்டு, வழிநடத்தப்படவேண்டும். 'நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, தேவனுக்குமுன்பாக மனத்தாழ்மையாய்' நடக்கும்படி, மனதுருக்கமுள்ளவர்களாக, ஆக்கப்பூர்வமானவர்களாக, தைரியமுள்ளவர்களாக வாழவேண்டும்.

*2019, செப்டம்பர் 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு செப்டம்பர் 15

# ராஜ்யத்தின் முன்னுரிமைகள்

தேவனுடைய ராஜ்யத்தின் அங்கத்தினர்களாக வாழ விரும்புகிறவர்கள், இந்த உலகத்திலிருந்து வேறுபடுகிற விழுமியங்களின்படி, முன்னுரிமைகளின்படி வாழ்வார்கள். இயேசுவின் போதனைகளும், புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகளும் இதைத் தெளிவுபடுத்துகின்றன.

**கேள்வி: மத் 6:25-33இல் கொடுக்கப்படும் நிச்சயம் என்ன? நம்முடைய முன்னுரிமைகளில் இந்த நிச்சயம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும்?**

'ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள்' என்று இயேசு சொன்னார். மத் 6:25. இவை எல்லாமே முக்கியமானவைதாம்; ஆனால் தேவனுடைய ராஜ்யத்தின் வெளிச்சத்தில் இவற்றைப் பார்க்கவேண்டும். அதாவது அர்த்தமுள்ள, நடைமுறைரீதியான விதங்களில் நம் முன்னுரிமைகளை மாற்றியமைக்க வேண்டும். பிறர்மேல் அக்கறைகாட்டவும், அவர்களைத் தூக்கிவிடவும் வேதாகமம் சொல்வதால், இயேசுவின் காலடிகளைப் பின்பற்ற விரும்புகிறவர்களின் முன்னுரிமைகளில் இதுவும் இடம்பெறவேண்டும். நம்மைப்பற்றி அதிகம் யோசிக்காமல், மற்றவர்களைப்பற்றி அதிகம் யோசிப்பதற்கு இது நம்மை வழிநடத்தவேண்டும்.

முன்னுரிமைகளை மாற்றுவது, அதிகாரம்படைத்தவர்கள், சிறுமைப்பட்டவர்கள் மேலுள்ள நம் உறவை மாற்றுகிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் மேலதிகாரிகளை மதித்து, அவர்களுக்குக் கீழ்ப்படியுமாறு வேதாகமம் சொல்கிறது. ரோமர் 13:1-7. ஆனாலும், 'மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது' என்று அப் 5:29 சொல்கிறது. இயேசுவைச் சிக்கவைக்க முயன்றோரிடம் இந்த இரண்டு நியதிகளையும் சமநிலைப்படுத்தி இயேசு பதிலளித்தார்: 'இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்.' மத் 22:21.

அதிகாரமுள்ளவர்கள் மிரட்டியோ வலுக்கட்டாயமாகவோ அதிகாரம்செலுத்த முயல்கிறார்கள். தீமையைக் கண்டு எப்போதும் அமைதியாக இருக்கவேண்டியதில்லை. இயேசுதான் அதற்குச் சாட்சி. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை அணுகுவதுபற்றி எலன் ஒய்ட் கூறுகிறார்: "தேவவார்த்தைக்கும், கற்பனைக்கும் மனிதருடைய சட்டங்கள் முரண்படும்போது, விளைவுகள் என்னவானாலும் வசனத்துக்கும் கற்பனைக்கும்தான் கீழ்ப்படியவேண்டும். ஓர் அடிமையை அவன் எஜமானிடம் ஒப்படைக்குமாறு சட்டம் சொன்னால், அதற்குக் கீழ்ப்படிய வேண்டாம். அந்தச்சட்டத்தை மீறுவதின் விளைவுகளைச் சந்திக்கலாம். அடிமையானவன் எந்த மனிதனுடைய சொத்தும் அல்ல. தேவன்தாம் எஜமான். தேவனுடைய கைக்கிரியைகளை மனிதன் எடுக்கவும், சொந்தங்கொண்டாடவும் எந்த உரிமையும் இல்லை."

அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியவேண்டும்; அதிகாரிகளால் ஒடுக்கப்படுகிறவர்களுக்கு ஆதரவு காட்டவேண்டும்; இதில் எவ்வாறு சமநிலையோடு இருக்கலாம்?

# மனதுருக்கத்தில் சோர்வு

'உலகத்தின் உபத்திரவங்கள்' நம்முடைய நல்ல நோக்கங்களையும் மடங்கடிக்க வாய்ப்புள்ளது. இருந்தும், வேதனையில் உள்ளவர்களுக்கு இன்று பலர் உதவிவருகிறார்கள். நாமும் அவ்வாறே உதவி செய்ய பல்வேறு மனநிலைகளும் நடவடிக்கைகளும் நமக்குத் தேவை.

*மனதுருக்கம்:* பாதிக்கப்பட்டவரின் வேதனையை உணர்வதும், பரிதவிப்பதும்தான் நடவடிக்கைக்கான முதல் படி. அந்த உணர்வு எப்போதும் நம்மில் இருக்கவேண்டும். 'மனதுருக்கத்தில் சோர்வு' என்கிற நிலை இன்று காணப்படுகிறது. அதாவது, நமைச் சுற்றிலும் துயரச் சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டே இருப்பதால், துக்கத்தை உணரமுடியாத அளவுக்கு மனம் மரத்துப்போகிற நிலை உள்ளது. இயேசுவைச் சுற்றிலும் ஏராளமான தீமைகளும் வேதனையும் காணப்பட்டன; ஆனாலும் அவர் மனதுருக்கமுள்ளவராக இருந்தார். அதுபோல நாமும் இருக்கவேண்டும்.

*கற்றுக்கொள்தல்:* அநியாயம், தரித்திரம் சம்பந்தப்பட்ட சூழ்நிலைகள் பெரும்பாலும் சிக்கலானவையாக இருக்கும். அவற்றைக் காதுகொடுத்துக் கேட்பதும், கற்றுக்கொள்வதும் முக்கியம். நல்ல நோக்கங்களுடைய பலர், உதவிசெய்ய முயன்று பிறர் வாழ்வில் பாதிப்பை உண்டாக்கிய அனுபவங்கள் உண்டு. அதற்காக, செயல்படாமல் இருப்பதே நல்லதென எண்ணக்கூடாது. தகவல்களைத் திரட்டி, யோசனையோடு அந்தச் சூழ்நிலைகளை அணுகினால் நல்லது.

*ஜெபம்:* பிரச்சனை எழுந்ததும், உடனே 'நடவடிக்கையில்' இறங்கிவிடவேண்டுமென யோசிப்போம். ஜெபம் ஒரு நடவடிக்கையென வேதாகமம் கூறுகிறது. தரித்திரர், சிறுமைப்பட்டோருக்காகவும் அவர்களை ஒடுக்குகிறவர்களுக்காகவும் ஜெபிக்கும்போது, அவர்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். 1தீமோ 2:1,2. அதே சமயம், அவர்களுக்கு எவ்வாறு உதவிசெய்யலாமென தேவனிடம் ஆலோசனை கேட்கவேண்டும். நீதி 2:7,8.

*எதிர்பார்ப்புகள்:* உபத்திரவத்தைப் போக்கும் பணியில் சம்பந்தப்பட்ட இன்னொரு முக்கிய விஷயம் என்னவென்றால் சமுதாய, அரசியல், தனிப்பட்ட சூழ்நிலைகளின் சிக்கலை உணர்ந்து சரியான எதிர்பார்ப்புகளுடன் இருக்கவேண்டும். மக்கள் தாங்களே தீர்மானம் செய்ய வழிநடத்தவேண்டும்; மேலும், வாய்ப்புகளை உருவாக்க, நாம் முயலவேண்டும். அந்த வாய்ப்புகளை அவர்கள் தவறாகப் பயன்படுத்தலாம். அந்தத் தெரிவையும் நாம் மதிக்கவேண்டும். கஷ்டப்படுகிறவர்களுக்காக நாம் எதைச் செய்தாலும், 'மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்' என்கிற நியதி நம்மைக் கட்டுப்படுத்த வேண்டும். மத் 7:12.

கிறிஸ்தவ நடவடிக்கையில் ஜெபத்தின் பங்கு என்ன? யாக் 1:5–8. பிறருக்காக நாம் ஜெபிக்கும்போது, அந்த ஜெபத்திற்குப் பதில்கிடைப்பதில் நம்முடைய பங்கு என்ன? யாக் 2:15,16.

# தாராளமனப்பான்மை

'உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.' 2கொரி 9:7. தாராளமாகக் கொடுப்பது கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். கொடுத்தல், பணவிஷய முன்னுரிமைகள் போன்றவற்றில் வேதாகமம் சொல்வதின்படி நடக்கவேண்டும். முக்கியமான ஒரு காரியத்திற்காகக் கொடுப்பதாக இருந்தாலும்கூட, தாராளமனப்பான்மை என்பது வெறுமனே கொடுப்பது மட்டுமல்ல.

மாறாக, இது ஒரு மிகப்பெரிய பண்பு; 'கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களின்' ஒரு முக்கியப்பண்பு. சங் 112இல் இது அடிக்கடி சொல்லப்படுகிறது. 'இரங்கிக்கடன்கொடுத்து, தன்காரியங்களைநியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.' சங் 112:5.

**கேள்வி: எளியவர்களுக்கு எவ்வாறு தாராளமாகக் கொடுக்கவேண்டும்? லேவி 25:35-37; சங் 119:36; 2கொரி 8:12-15; 1யோவான் 3:16-18; 1தீமோ 6:17-19.**

தேவனுடைய தாராளத்தன்மையை பவுல் அடிக்கடி சுட்டிக்காட்டுகிறார்; நமக்காக கிறிஸ்து தம் ஜீவனையே கொடுத்தார். அதுதான் கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆதாரம். மேலும், அவர் நமக்காக மரித்ததுதான் நாம் மற்றவர்களுக்குத் தாராளமாக உதவ நம்மைத் தூண்டவேண்டும். 'உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்.' பிலே 1:6.

பெருந்தன்மை, தைரியம், அனைவரையும் நேசிக்கும் மனது ஆகியவற்றோடு வாழ்க்கையை அணுகுவதே தாராளமனப்பான்மை. எனக்கு என்ன கிடைக்கும் என்றே நம்முடைய வாழ்க்கையும் சமுதாயமும் கலாச்சாரமும் உள்ளது. சுயநலம் பேணுவது தவிர வேறு சிறந்த வாழ்க்கை இல்லாததுபோலவே அநேகர் இருக்கிறார்கள்.

நம் விசுவாசம் உண்மையானால், அது நம்மை சுயத்திற்கு மரிக்கவும், பிறருக்காக வாழவும் செய்யவேண்டும். சுகமோ துக்கமோ இவ்வுலகத்தையும் உலகமக்களையும் தேவன் பார்ப்பதுபோல நாமும் பார்க்க நம் விசுவாசம் உதவுகிறது. எளியவர்களுக்கும் நம்மால் முடிந்தமட்டும் உதவ நம்மைத் தூண்டுகிறது. நிதிதிரட்டுகிறவர்களும், தொண்டுநிறுவனங்களும் தாராளமனப்பான்மையைப் போற்றுகிறார்கள். அவ்வாறு கொடுத்தலுக்கு ஒரு எல்லை உண்டு. அதிகமாகக் கொடுப்பது தாராளமாகிவிடாது. மாற்கு 12:41-44. அதைவிட அதிகமானது அதில் சம்பந்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு விஷயத்திலும் தாராளமாக நடக்க நாம் பழகவேண்டும். இந்த மனநிலை தானாகவே வருகிற ஒன்றல்ல. நம்முடைய பாவத்தன்மையும் சுயநலமும் நம்மைத் தடுத்தாலும், முன்னேதீர்மானித்து, வேண்டுமென்று நாம் வெளிப்படுத்த வேண்டிய ஒரு தன்மை இது.

பணஉதவி செய்வது போக வேறு என்னென்ன வழிகளிலெல்லாம் நாம் தாராளமனப்பான்மையுடன் நடந்துகொள்ளலாம்?

# சமாதானம்பண்ணுதல்

**கேள்வி: மத் 5:9ஐ வாசியுங்கள். இன்றைய உலகம் இருக்கிற நிலையில், இந்த வசனத்தில் இயேசு சொல்கிறபடி செய்வது எளிதா? இதை எவ்வளவு தூரம் நாம் வெற்றிகரமாகச் செய்யமுடியும்? மாற்கு 13:7.**

உபத்திரவத்திற்கான ஒரு முக்கியக் காரணம் யுத்தம். நேரடிப் பாதிப்புக்குள்ளாகிறவர்களின் வாழ்க்கை யுத்தத்தால் சிதைகிறது. இராணுவத் தளவாடங்கள் வாங்க எடுக்கப்படும் சிரத்தையையும் பணச்செலவுகளையும் யுத்தத்தால் பாதிக்கப்படுகிற மக்களுக்குச் செலவிட்டால் நன்றாக இருக்கும். ஏன் போரில் 'வெற்றி பெற்றவர்கள்' மத்தியிலும் இத்தகைய பாதிப்புக்கு ஆளானவர்கள் இருப்பார்கள். மேலும், சிறிய சண்டைகளும்கூட குடும்பங்களையும் சமுதாயங்களையும் சீரழிக்கின்றன. நியாயத்தை நிலைநாட்ட விரும்புகிறவர்கள் கட்டாயமாகச் சமாதானம்பண்ணவேண்டும்.

கிருபையுள்ள தேவன், சமாதானம்பண்ணுவதற்கு மிகப் பெரிய முயற்சியெடுத்தார்; பாவமனிதர்களை அவர்களுடைய சிருஷ்டிகரோடு ஒப்புரவாக்கினார்; இதை இயேசுவின் சுவிசேஷம் காட்டுகிறது. 2கொரி 5:18-21. இவ்வாறு நாம் ஒப்புரவாக்கப்பட்டதுதான் மற்றவர்களை நாம் 'ஒப்புரவாக்குவதற்கான' மாதிரியாக இருக்கிறது.

**கேள்வி: ஏசா 52:7 சொல்கிறபடி நாம் எவ்வாறு வாழலாம்?**

வன்முறை உலகில் சமாதானம்பண்ணுவதற்கான ஊக்கமாகவும், மாதிரியாகவும் ஆதாரமாகவும் சமாதானத்தின் சுவிசேஷம் இருக்கிறது. 'தேவனோடு இசைந்திருக்கும் இருதயமானது பரலோக சமாதானத்தில் பங்கெடுக்கிறது; தன் ஆசீர்வாதமான செல்வாக்கை தன்னை சுற்றிலும் பரவவிடுகிறது. உலக சச்சரவால் துக்கமடைந்து, களைத்த இருதயங்களின்மேல் சமாதானத்தின்ஆவியானவர் பனியைப்போல இறங்குவார்.' - *EGW, MB, p 28.*

'சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்' என்று மலைப்பிரசங்கத்தில் இயேசு சொன்னார். மத் 5:9. இதற்கு விளக்கமளிக்கும் விதத்தில், கொலை செய்யாதிருப்பாயாக என்கிற கட்டளையை நினைவுபடுத்தி, கோபமும் கசப்பும்கூட கொலைதான் என்றார். மத்தேயு 5:21-26. நம் சத்துருக்களைச் சிநேகிக்கவும், நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காக ஜெபிக்கவும் சொன்னார். மத் 5:43-48. அதாவது, அவர்களுடைய நலனுக்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். உலகில் துயர்மிக்க சமயங்களில் சமாதானம்பண்ண முயன்று, ஓரளவுக்கு ஒப்புரவாகுதலையும் சுமுகமான நிலையையும் ஏற்படுத்தின பலர் இருக்கிறார்கள். சச்சரவுகளால் ஏற்பட்ட ஏராளமான அநியாயத்தையும் உபத்திரவத்தையும் போக்குவதற்கு உதவியிருக்கிறார்கள்.

உங்கள் சபையில் நீங்கள் எவ்வாறு சமாதானம்பண்ணலாம்?

# பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்தல்

'மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு' என்று சாலொமோன் எழுதினார். பிர 3:7. எப்போது பேசவேண்டும், எப்போது அமைதிவேண்டும் என்று அறிவது சிக்கலானது. சிறுமைப்பட்டோருக்காகவும் குரலற்றோருக்காகவும் குரல்கொடுக்கவேண்டிய விஷயத்தில், தீமையை நன்மையால் வெல்லவேண்டிய விஷயத்தில், ஒரு சபையாக நாம் எதுவும்பேசாமல் அமைதிகாக்கிற தவற்றைச் செய்கிறோமா?

இயேசுவின் முன்மாதிரியின்படி செய்ய அழைக்கப்பட்டவர்கள் நாம். அவருடைய கைகளாகவும் கால்களாகவும் இருக்கிறோம். ஆனால், தமக்காகப் பேசும்படி இயேசு நம்மை அழைக்கிறார்; இதை வேதாகமத் தீர்க்கதரிசிகள் மூலம் அறியமுடிகிறது. அதாவது, தேவனுக்காகப் பேசவும், தேவன் பாதுகாக்க விரும்புகிறவர்களுக்காகப் பேசவும் அவர் நம்மை அழைக்கிறார். சங் 146:6-10.

**கேள்வி: குறிப்பிட்ட சமயத்தில், குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட பின்னணியில் கொடுக்கப்பட்ட ஏசாயா 58:1-10 வசனங்கள் இன்று நமக்குச் சொல்லும் செய்தி என்ன? ஏசாயா இதை எழுதிய சமயத்திற்கும், இன்று நாம் வாழும் சமயத்திற்கும் இடையே எவ்வளவு மாற்றம் நிகழ்ந்துள்ளது?**

நியாயம்செய்தால் பிரபலமாகலாம் என்பதற்காக தீர்க்கதரிசிகள் சொல்லவில்லை. தேவன் கட்டளையிட்டிருந்தார், நியாயத்தை தேவன் விரும்பினார். எளியோர் மற்றும் சிறுமைப்பட்டோர்மேல் பரிதாபம் கொண்டார்கள், தங்கள் சமுதாயத்தின் நலனை விரும்பினார்கள், அதனால்தான் தங்களுக்கு எதிர்ப்பும், கஷ்டமும், ஆபத்தும் நேரிட்டபோதிலும் தாங்கள் வாழ்ந்தகாலத்தில், தங்களுடைய பகுதியில் குரலற்றோருக்குக் குரல்கொடுக்க தீர்க்கதரிசிகள் துணிந்தார்கள்.

சுவிசேஷ அறிவையும், இயேசுவைப் பிரதிபலிக்கும் அழைப்பையும் பெற்ற செவந்-டே அட்வென்டிஸ்டுகளும்கூட, இந்த உலகத்தின் தீமையைப்போக்குவதில் எவ்வளவோ நன்மைகளைச் செய்யமுடியும்.

அதாவது, ''வறுமையையும், அதற்குக் காரணமான அநியாயங்களையும் ஒழிப்பது கிறிஸ்தவ சமூகப் பொறுப்பின் ஒரு முக்கிய அம்சம். எளியோர்மேல் தேவன் அக்கறையோடிருக்கிறார், உதவியற்ற நிலையில் இருப்போருக்கு தம் பிள்ளைகள் உதவ விரும்புகிறார். எல்லா மனிதர்களுமே தேவசாயலையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கிறார்கள். லூக் 6:20. எளியோர் மத்தியில் ஊழியம் செய்த இயேசுவின் முன்மாதிரியையும் எடுத்துக்காட்டையும் நாம் பின்பற்றவேண்டும். மத் 25:35,36.

சிந்தியுங்கள்: ஆவிக்குரிய கூட்டத்தாரான செவந்-டே அட்வென்டிஸ்டுகள் எளியோருக்கு நியாயம் கிடைக்கப் பேசவேண்டும். 'ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களின் நியாயத்துக்காகவும், (நீதி 31:8),' 'அநியாயமான தீர்ப்புகளைச் செய்கிறவர்களுக்கு' (ஏசா 10:2) எதிராகவும் பேசவேண்டும். 'எளியவர்களின் நியாயத்தை' விசாரிக்கிற கர்த்தருடன் சேர்ந்து நாமும் பிரயாசப்படவேண்டும். சங் 140:12.

# வெள்ளி செப்டம்பர் 20

## மேலும் படிக்க:

'வானத்திலும் பூமியிலும் தேடிப்பாருங்கள், நம்முடைய பரிவும் உதவியும் தேவைப்படுவோருக்கு இரக்கத்தின் பணிகளைச் செய்வதில் வெளிப்பட்டுள்ள சத்தியத்தை விட வல்லமையான சத்தியம் எதுவுமிருக்காது. இது இயேசுவில் காணப்படுகிற சத்தியம். கிறிஸ்தவர்களெனச் சொல்லுபவர்கள் பொன்விதியின் நியதிகளின்படி வாழ்ந்தால், சுவிசேஷம் அறிவிப்பதில் அப்போஸ்தலர்களுடைய காலத்தில் வெளிப்பட்ட அதே வல்லமை வெளிப்படும்.' - *EGW, MB, p 137*.

'தேவன்மேல் உச்சக்கட்ட அன்பும், ஒருவருக்கொருவர் சுயநலமற்ற அன்பும் வைப்பதுதான் நம் பரலோகப் பிதா கொடுப்பதிலேயே மிகச்சிறந்த ஈவாகும். இது உணர்ச்சித்தூண்டலால் வருகிற அன்பல்ல, இது ஒரு தெய்வீக நியதி. ஒரு நிரந்தர வல்லமை. பரிசுத்தமாக்கப்படாத இருதயம் இதைத் துவக்கவோ உருவாக்கவோ முடியாது. இயேசு அரசாளுகிற இருதயத்தில் மட்டுமே இது காணப்படும். ஆத்துமாவில் பேணிவளர்க்கப்பட்ட இந்த அன்பு, வாழ்க்கையை இனிப்பாக்குகிறது; தூய்மையாக்கும் செல்வாக்கை சுற்றிலும் வீசுகிறது.' - *EGW, AA, p 551*.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *இயேசு நமக்காகச் செயல்பட்டதுபோல, நாமும் பிறருக்காகச் செயல்படுவதற்கு சுவிசேஷம்தான் அடிப்படையாகவும் ஊக்கமாகவும் இருக்கிறது. தேவன் நமக்காகச் செய்திருக்கிற, நம்மேல் அவர் காட்டுகிற அன்பைப் புரிந்துகொள்ளவும் போற்றவும் இது எவ்வாறு உதவுகிறது?*

2 *குரலற்றோருக்காகக் குரல் எழுப்புவதும், சமாதானம்பண்ணுவதும், இது போன்ற செயல்களில் ஈடுபடுவதும் நம்மை பொதுமக்கள் கவனத்திற்குள்ளும் அரசியல் அரங்கிற்குள்ளும் இழுத்துவிடும். அரசாங்கத்தைவிட்டு ஒதுங்கியே இருப்பதில் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையை மிஞ்சிய சபை கிடையாது. தேவையற்ற அரசியல் ஈடுபாட்டிற்கும், பலரறியும் விதங்களில் பேசி, செயல்படுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?*

3 *இந்த வாரப்பாடத்தில் விவாதிக்கப்பட்ட என்ன விஷயத்தை உங்கள் வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் கடைப்பிடிக்க விரும்புகிறீர்கள்? அதை எவ்வாறு வெற்றிகரமாக்கலாம்?*

4 *உங்கள் சமுதாயத்திலோ உலகத்திலோ காணப்படுகிற குறிப்பிட்ட எந்தத் தீமைக்காகவும் அடக்குமுறைக்காகவும் ஜெபிப்பதற்குத் தீர்மானித்திருக்கிறீர்கள்?*

**பாடச்சுருக்கம்: இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாக மாறும்போது நம் வாழ்க்கையை அது பலவிதங்களில் மாற்றுகிறது. எளியோர், புறக்கணிக்கப்பட்டோர்மேல் தேவன் அக்கறைகாட்டுவதுபோல நாமும் அக்கறைகாட்டவேண்டுமென்று நம்மைச் செயல்படத் தூண்டுவதும் அதில் ஒன்று. இது எளிய முயற்சி அல்ல, எல்லாரும் விரும்புகிற ஒன்றும் அல்ல. ஆனால் இது நம் முன்னுரிமைகளை மாற்றியமைக்கும். நம்மைச் சுற்றிலும் காணப்படுகிற பாதிப்புகளைச் சரிசெய்வதற்கு மும்முரமாக முயல நம்மை ஊக்குவிக்கும்.**